செய்தி வெளியீடு **நாள் : 03.11.2025**

ஒரே நேரத்தில் 84 மாணவர்கள் பயிற்சி பெறும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கொளத்தூர் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தை இம்மாதம் 20ஆம் தேதிக்குள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (3.11.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, பெரியார் நகர் நூலகத்தை புதுப்பித்து கட்டப்பட்டு வரும் **'முதல்வர் படைப்பகம்'** கட்டிடத்தின் இறுதிக்கட்ட பணிகள், அகரம், ஜெகநாதன் தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் **(Kolathur Dialysis Centre),** கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் **புதிய நவீன சந்தை (Kolathur New Modern Market)** மற்றும் கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் **"மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)"** முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

நடப்பு நிதியாண்டில் மானியக் கோரிக்கையின் போது, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் அகரம் பகுதியில் அமைந்துள்ள **கொளத்தூர் முதல்வர் படைப்பகம்** போன்று சென்னையின் வடசென்னையில் 2, இதர பகுதிகளில் 13 என 15 இடங்களில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். அதன் படி கொளத்தூரில் பெரியார் நகர் பகுதியில் செயல்பட்டு வந்த பழமையான நூலக கட்டிடம் இடிக்கப்பட்டு, ரூபாய் 6.50 கோடி மதிப்பீட்டில் நூலகம் புனரமைப்பு மற்றும் போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சியகம், கட்டணமில்லா இணைய வசதி, குளிரூட்டப்பட்ட பயிற்சி கூடம், கணினி அறை கொண்ட **பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தின்** இறுதி கட்டப் பணிகளை இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கொளத்தூர் ஜெகநாதன் நகரில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் 4 தளங்களில் நவீன வசதிகளுடன் அமைய உள்ள இலவச டயாலிசிஸ் சிகிச்சை பிரிவு, செயற்கை உறுப்பு பொறுத்தும் சிகிச்சை பிரிவு, இயன்முறை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட ஒருங்கிணைந்த மருத்துவ மையம், கொளத்தூர் பேப்பர் மில் சாலையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மூன்று தளங்களில் கட்டப்பட்டு வரும் நவீன சந்தை கட்டுமான பணியை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலை, விநாயகபுரம் பகுதியில் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் 4 தளத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)" முன்னேற்றப் பணிகளை இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாதம் 20 ஆம் தேதிக்குள் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார், நூலகத்துடன் கூடிய, போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 84 மாணவர்கள் பயிற்சி பெறும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய வகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. அதிக பணம் செலுத்தி போட்டி தேர்வுக்கான பயிற்சி மையங்களில் பயில முடியாத மாணவர்களுக்கு இந்த பயிற்சி மையம் மிகுந்த உதவியாக இருக்கும்.

மேலும் கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு அவதிப்படுவதற்காக பிரத்தியேக டயாலிசிஸ் சிகிச்சை வழங்குவதற்கான இலவச சிகிச்சை மையம் மற்றும் எதிர்பாரா விதமாக கை கால்கள் இழந்தவர்களுக்கு செயற்கை கை மற்றும் கால் பொருத்தக்கூடிய சிகிச்சை மையம், இயன்முறை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகள் கொண்ட மருத்துவ மையம் வரும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

சென்னை வசதியற்ற, நடுத்தர மக்களுக்காக பல திட்டங்களை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** மேற்கொண்டு வருகிறார். கொளத்தூர் தொகுதியை ஒட்டுமொத்தமாக தன்னிறைவு பெறும் தொகுதியாக மாற்ற வேண்டும் என்ற நடவடிக்கையை **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** மேற்கொண்டு வருகிறார், அதன் ஒரு பகுதியாகத்தான் இதுபோன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., கொளத்தூர் காவல் துணை ஆணையர் திரு.பி.குமார், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (சென்னை) முதல்வர் டாக்டர் டி.எஸ்.சரவணன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உதவி பதிவுத்துறை தலைவர் (சென்னை வடக்கு) திருமதி.ரூபியா பேகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஐசிஎப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகப்பிரியா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified by RealEstate™